1072

1039

# ஸ்வர்ணமணிமாலை.

மணி 2.

4 JUN 1924

The Golden Chain

மசுப்பையர்,

லைப்ரரி

ாறு.

QM
N24
183838

# " ஸ்வர்ணமணிமாலை "

இந்தச் சங்கம் சிறுவர்கள் சிறுமியர்களுக்கு ஏற்பட்டது. அடியில் எழுதியிருக்கின்ற வசனங்களை இந்தச் சங்கத்தில் சேருகின்ற ஒவ்வொருவரும் தினம் ஒருதரம் படித்து, மனதில் நினைக்க வேண்டியது.

1. ஸ்நேஹம் என்னும் கம்பியால் நம்முடைய சங்கமாகிய " **ஸ்வர்ண மணிமாலை** " கோக்கப்பட்டிருக்கிறது. இந்த மாலையில் நான் ஒரு மணியாவேன். இந்த மாலை உலகமுழுவதையும் சேர்த்து அணைத்துக் கொண்டிருக்கிறது. அதாவது இந்தச் சங்கம் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும்இருக்கின்றது. இந்த " ஸ்வர்ணமணிமாலையில் " ஒரு மணியாயுள்ள நான் உறுதியுள்ளவனு(ளா)கப் பிரகாசிப்பேன்.

2. அதனால் எனக்கு எதிர்ப்படும் எந்த உயிர்ப் பிராணியையும் அன்பாகவும் ஆதரவாகவும் நடத்த முயலுவேன். என்னின் மெலியாரைக் காப்பாற்றவும் அவர்க்கு உதவிபுரியவும் முயலுவேன்.

3. எப்போதும் மேன்மையான எண்ணங்களையே சிந்திக்கவும், இனிய சொற்களையே பேசவும், நல்லகாரியங்களையே செய்யவும் நான் பழகுவேன். இவ்விதம், பிறருக்கு உபகாரமாகவும் நல்லவனு(ளா)கவும் நடப்பேன்.

4 இம்மாலையின் மணிகளாகிய மற்ற சிறுவர்கள் ஒவ்வொருவரும் எப்போதும் பளபளப்பும் உறுதியுமான மணிகளாயிருக்க வேண்டுமென விரும்புகிறேன், அதாவது நல்ல பிள்ளைகளாக வேண்டுமென்று விரும்புகிறேன்.

"ஸ்வர்ணமணி மாலை" என்ற சங்கம் 1895-வருஷத்தில் அமெரிக்காவில் Mr. வால்டர்ஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவருடைய வேண்டுகோளின் பிரகாரம், இச்சங்கத்தின் லக்ஷ்யமாகிய நான்கு வசநங்களும், கியாதி பெற்ற ஸ்ரீ அன்னி பெஸண்ட் அம்மையாரால் ஆலோசித் தெழுதப்பட்டன. உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இச்சங்கம் பரவியிருக்கின்றது; எல்லா இடங்களிலும் இச்சங்கத்தைச் சேர்ந்த ஸ்வர்ண மணிகள் பிரகாசிக்கின்றன. அதாவது இச்சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள் எல்லோரும் தாம் பழகும் உயிர்ப் பிராணிகளிடத்தும் ஜநங்களிடத்தும் அன்போடும், கருணையோடும், அமரிக்கையாகவும் நடந்து கொள்வார்கள் என்பதாம். அதனால், மற்றவர்களும் அன்பு, கருணை, அமரிக்கை என்னும் குணங்களுடன் பிரகாசிப்பார்கள். உலகத்திலுள்ள நாநாவித ஜாதியார்களான சிறுவர் சிறுமிகளுக்கு "ஸ்வர்ண மணிமாலை" ஒரு பொதுச் சங்கமாகும். இச்சங்கம் ஏற்பட்டது முதல் அநேக மணிகள் (சிறுவர்கள்) சேர்ந்து, மாலையானது (சங்கம்) இப்போது வெகு நீளமாயிருக்கிறது.

இன்னும் நாளுக்கு நாள் மணிகள் (சிறுவர்கள்) சேரச் சேர பெரிதாகியே வருகிறது. இச்சங்கத்தின் ஆதியில் சேர்ந்த சிறுவர்கள் அநேகர் இப்போது வயது ஆனவர்களாயிருக்கிறார்கள்.

இச்சங்கத்தில் சேருகின்றவர்கள் எல்லோரும் ஒவ்வொரு நாளும் காலையில் தூங்கி எழுந்தவுடன், மேலேயுள்ள நான்கு வசநங்களையும் ஒருதரம் படிக்கவேண்டும். அத்துடன், படித்தபிரகாரமே ஒவ்வொருநாளும் நடக்கவும் முயற்சிக்க வேண்டும். இது தான் சங்கத்தாரின் கடமை.

நாய், பூனை, ஆடு, மாடுகள் முதலிய பிராணிகளுக்குக் கூட இந்தச் சங்கத்தின் மெம்பர்களாகிய ஸ்வர்ணமணிகளிடத்தில் வெகு பிரியம். ஏனென்றால் ஸ்வர்ணமணிகள் அவைகளைப் பிரியமாகவே நடத்துகிறார்கள்.

---

இப்போது அடையாறு, ஆக்கூர், கடம்பூர், கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் முதலிய பல இடங்களில் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வருடச் சந்தா 4 அணா. பத்திரிகை மாதமொன்று கிடைக்கும்.

BESANT PRESS, MADRAS

170.L
138
9(M)
N74

அன்புள்ள ஸ்வர்ண மணிகளே !

இதில் உங்களுக்கு, கியாதிபெற்ற அன்னி பெஸண்ட் அம்மையாரைப்பற்றி கொஞ்சம் சொல்வேன். அவரைத் தமிழர்கள் **அன்னை வஸந்தை** என்பார்கள். ஸ்வர்ண மணிகள் சொல்ல வேண்டிய நான்கு வசனங்களை எழுதினவர் அவரே. அவைகளின்படி நாம் நடந்து கொள்வதால் நமக்கும், நம் பெற்றோர்க்கும், உபாத்தியாயர்களுக்கும், பிறருக்கும் மற்ற எந்த உயிருக்குமே சுகம் உண்டாகும். இம்மாதிரியான நல் வழியைக் காண்பித்த **அவர்** நம் **குரு** என்றே சொல்லலாம். அவருக்கு ஸ்வர்ணமணிகளைக் கண்டால் மிகப் பிரியம்.

உங்களுக்கு எதிர்ப்படும் எந்த பிராணிக்கும் நீங்கள் **அன்புமயமான** எண்ணங்களால் நன்மை செய்யலாம். நீங்கள் பெரியவர்களானதும், அம்மையாருக்குச் சீடர்களானால், எங்களுக்கு கிடைத்தது போல் உங்களுக்கும் தியானம் செய்யும்

122838

முறையைக் கற்பிப்பார். அதுவரை ஸ்வர்ண மணி மாலையின் நான்கு வசனங்களைக் காலையும் மாலையும் பாடிப் பாடி அவைகளின்படி நடந்து வரலாமன்றோ? அதனால் நீங்களும் பிறர்க்கு உழைக்கும் வழக்கத்தில் திடம் பெறுவீர்கள், இது இப்படி இருக்கட்டும்.

பிராணிகளின் உதவி இல்லாமல் நமக்கு என்ன காரியம் முடியும்? வண்டி இழுக்கக் குதிரை இல்லாவிட்டால் நாம் எவ்வளவு தான் நடக்க முடியும்? மாடுகள் வயலை உழுகாவிட்டால், நாம் நெல் விதைப்பது எப்படி? மாடுகள் செக்குச் சுற்றமாட்டேனென்றால், நமக்கு எண்ணெய் ஏது? கழுதை பொதி சுமக்க மாட்டேனென்று சொல்லுமானால். நம் துணிகளைச் சீக்கிரம் வெளுத்துக் கொண்டுவர வண்ணான் மிகச் சிரமப்படுவான். நீங்கள் அழுக்குத் துணிகளையே கட்டிக் கொண்டிருக்க நேரும். அதனால் சிறங்கு வரும். வலிபொறுக்க முடியாமல் அழுவீர்கள். உடம்பு இளைத்துப்போம். பசு நமக்குப்

பால் தராவிட்டால், நாம் ருசியாய்ச் சாப்பிட முடியாது. தயிரும் நெய்யும் இல்லாமலே சோறு சாப்பிட வேண்டும். இந்த பிராணிகளுக்கெல்லாம் பேசத் தெரியாவிட்டாலும் எத்தனை நன்மைகளை அவைகள் நமக்குச் செய்கின்றன!

ஆகையால் இந்தப் பிராணிகளுக்கு நாம் எப்போதும் நன்மை செய்ய வேண்டும். உங்கள் வீட்டு மாட்டுக் கொட்டம் சேறும் சாணியும் மூத்திரமுமாயிராமல், சுத்தமாய் அதைத் தினமும் கழுவி உலரவைக்கலாம். உங்கள் வீட்டு நாய்க்கு நோவுண்டாகாமல் தண்ணீரில் முழுக்காட்டி, அதற்குச் சுத்தத்தைக் கற்பிக்கலாம். இம்மாதிரியான காரியம் எதுவும் இழிவு அல்ல. ஏனெனில் இப் பிராணிகளும் கடவுளுடைய உயிராகிய நூலில்கோக்கப்பட்டிருக்கும் ஸ்வர்ண மணிகளே யாம். இப்பிராணிகளெல்லாம் பிற்பாடு நம்மைப் போல மனிதராகும் போது, தாம் ஒவ்வொன்றும் ஸ்வர்ண மணியே என்பதை மனப்பூர்வமாக உணரும்.

நீங்கள் யானையைப் பார்த்திருப்பீர்களே! நீங்கள் குழந்தைகளாயிருக்கும் போது தெரு மண்ணை எடுத்து தலையிலெல்லாம் போட்டுக் கொண்டு விளையாடினது போலவே, மண்ணை யெடுத்துத் தன் தலையிலெல்லாம் போட்டுக் கொள்ள அதற்கும் மிகப் பிரியம். ஆனால் ஸ்நானம் பண்ணவும் அதற்கு வெகு பிரியம். தன் தும்பிக்கையில் சுடச்சுடமாய் ஜலத்தை உறிஞ்சித் தன் தலையுச்சியிலும் முதுகின் உச்சியிலும் பீச்சிச் சுத்தம் செய்து கொள்வதைப் பாருங்கள். நீங்கள் மிருகங்களைவிட மேலானவர்களல்லவோ? உங்கள் உடம்பையும் உடுப்பையும் எப்போதும் சுத்தமாகவே வைத்துக் கொள்ள வேண்டாமோ? யானையின் புத்திசாலித் தனத்தையும் கவனியுங்கள். மாவுத்தன் சொல்லும் பாஷையை எவ்வளவு திட்டமாகத் தெரிந்து கொள்கிறது பாருங்கள். இப்பிராணிகள் தாம் பேசாவிட்டாலும் நம் பேச்சையும் சாடைமாடைகளையும் பழக்கத்தால் தெரிந்து கொள்கின்றன.

இப் பிராணிகள் நமக்கு இளைய சோதரர்கள். அவைகளிடமிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நற்குணங்களும் உண்டு. யானையைப் போல் பெருந்தன்மை யுடையவர்களாகவும் எறும்பைப்போல் சுறுசுறுப்புடையவர்களாக வும் இருந்து கொண்டு எந்தப் பிராணியையும் அன்பாக நடத்தி வாருங்கள் ஸ்வர்ணமணிகளே!

இதனால் தான் நம் அன்னை வஸந்தம்மையார்,

"ஆதலினால் எதிர்ப்படுமெவ் வுயிரையும்
நான் அன்பாகச்
சோதரர்போல் நடத்திடவே தொடங்கு
வனால் நொய்யவரை
ஈதலினால் இன்மொழியால் இயன்றளவும்
உபகரித்துக்
காதலினாற் காப்பாற்றக் கடைசி வரை
முயன்றிடுவேன்".

என்று தினமும் பாடக் கற்பித்திருக்கிறார்.

உங்கள் நண்பன்

வஸந்தானந்தன்.

# பெற்றோர்கட்கும் உபாத்தியாயர்கட்கும்

உலகெங்கும் எல்லோரிடத்தும் விளங்கும் ஆத்ம தத்துவம் ஒன்றே. அதன் கருவிகளான சரீரங்களின் அமைப்பும் ஒன்றே. ஆகையால் இவைகளை ஒட்டிக் குழந்தைகளைப் பயிற்ற வேண்டியதற்கான கல்வி முறையும் ஒன்றே. ஆனால் இது காலத்தையும், இடத்தையும், பாத்ரத்தையுங் கருதி வேறு படும். கல்விக்குச் சாதகமான இயற்கை முறையைத் தெரிந்து கொண்டு, அதற்கு இணங்கி நடப்போமானால், நம் குழந்தைகளை இளமையிலிருந்து முதுமைப் பருவத்தைக் கிரமமாய் எய்துவிக்கலாம். இயற்கையில் அரும்புகள் எவ்வாறு தாமே மலர்கின்றன? அவ்வாறு குழந்தைகளையும் தம் வளர்ச்சியில் இயற்கையாய் மலர்ந்து வரும்படி செய்யலாம். அப்போது கல்வி கற்பித்தல் ஓர் முறையான சாஸ்திரம் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். உதாரணமாக, ஒரு சீவன் சங்கீதத்தில் தேர்ச்சி பெறுவதற்கென்றே விசேஷ அவாவுடன் நம் குடும்பத்தில் பிறக்கிறான். அவனுடைய இயற்கையை அறிந்து அதன் வழியில் அவனைப் பயிற்றுவோமானால் அவன் தன் சக்திகள் யாவையும் விகஸிக்கச் செய்து பரிபாகமடைந்து உலகத்திற்கே ஓர் அரியவனாகப் புண்ணிய

மும் புகழும் பெற்றோங்குவான். அப்படியில்லாமல் அவனை நெசவு தொழிலில் பயிற்ற ஆரம்பித்தால், அவன் சோபிக்கமாட்டான். **சுகம்** ஜீவனுடைய உயிர்ச் சக்திகளைத் தழைக்கச் செய்யும். **துக்கம்** அவற்றை வாடச்செய்யும். **அன்பு** பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டி அவர்களை நற்காரியத்தில் தூண்டும். **பயமுறுத்தல்** பிள்ளைகளின் சக்திகளை மலரவொட்டாமல் குன்றச் செய்யும், **பகையை** வளர்க்கும். ஆகையால் வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், பிள்ளைகளை அன்புடன் நடத்தி, அவர்களுக்குச் **சந்தோஷகரமாய்** நடந்து கொண்டு அவர்களைப் படிப்பித்தல் வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் **ஆத்மா**. அதாவது, **ஞானம், இச்சை, கிரியை** என்னும் மூன்றை நோக்கியே இயங்கும் உயிர்ப் பொருளாம். இவ்வுயிர்ப் பொருளை மலரச் செய்தலே குழந்தையைப் படிப்பித்தலாம். ஆகையால் ஞானத்திற்கும், இச்சைக்கும், கிரியைக்கும் முறையே உரிய ஒவ்வொரு கரணத்தையும் பயிற்றுதல் வேண்டும். அதனால் **ஆத்ம** பரிபக்குவத்திற்கேற்ற **மத** போதனையும், ஞானபிவிருத்திக்கேற்ற **விவேகப்** பயிற்சியும், இச்சையைப் புனிதமாக்கும் **சீலாசாரப்** பயிற்சியும், காரியங்களில் சதுரர்களாகத் தக்க **சீரப்** பயிற்சியும் அவசியம். இந் நான்கில் எதொன்றுவது கவனம்

பெறாமற் போயினும், சரியான கல்வி முறையாகாது. இக் குறையால் தான் நம் மக்கள் எவ்வளவு படித்தும் ஜனஸமுதாயத்திற்குப் பிரயோசன மற்றவர்களாயிருக் கின்றனர்.

ஜனஸமுதாயமானது ஓர் ஸ்வர்ணமணி மாலை போன்றதாம். ஏனெனில், மாலையில் ஒவ்வொரு மணியும் உறுதியாயிருப்பதோடு பளபளப்பாய் ஒளி வீசுதற்கேற்கவே அம்மாலை ஒளிபெற்று விளங்குமாப் போல் ஓர் ஜனஸமுதாயத்தில் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும், இருக்கும் நிலைமையைப் பொறுத்தே அதன் க்ஷேமமும் இருக்கிறது. ஓர் மாலையில் ஓர் மணி சிந்திப் போனால், அம்மாலை முழுவதின் நேர்மை அந்தமட்டில் கெடுமல்லவோ? அதனால் ஒவ்வொருவரும் தத்தம் ஜனஸ்முதாயத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளையும், தம் தாய் நாட்டிற்காக வகிக்க வேண்டிய உத்தரவாதங்களையும் உணர்ந்து ஒழுகத்தக்க விதமாய் இளமை முதற்கொண்டே கல்வி பயிலல் வேண்டும். வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், கலாசாலையிலும் அங்கங்கே உரிய கடமைகளை உணர்ந்து செய்யவும், அவை யாவும் தாய் நாட்டுக்கு அர்ப்பிக்கத் தக்க கருமங்கள் என்றெண்ணவும் குழந்தைப் பருவம் முதலே பழக்கம் அவசியம். வீட்டில் வாழும் முறை, பள்ளிக்கூடத்தில்

பிள்ளைகள் தெரிந்து வருவதற்கு விரோதமாகவும், பையன்கள் கலாசாலைகளில் பெறும் படிப்பு அவர்கள் தாய் நாட்டுக்கு சற்றும் பொருத்தமில்லாததாகவும் இருக்குமானல், அவர்கள் முதியோராகி உலக வாழ்க்கையில் புகும்போது, தாம் படித்த படிப்பு சற்றும் சாதகமல்லவென்று காண்பார்கள். இளமையில் ஏற்பட வேண்டிய படிப்பும் பழக்கமும் ஸ்திரீ புருஷர்கள் பிற்காலம் குடும்பிகளாகித் தாய் நாட்டுக்கு உத்தம மக்களாய் வாழ்வதற்கு ஏற்ற அஸ்திபாரமாயிருத்தலவசியம். கடமைகள் யாவும் நாம் தீர்க்க வேண்டிய கடன்கள் என்பதை மாணவர்கட்கு அறிவுறுத்தல் வேண்டும். உதாரணமாக முதன் முதல் பெற்றோர்க்கும், சோதர சோதரிகளுக்கும், வேலைக்காரர்களுக்கும் நாம் எவ்வளவோ கடன் பட்டிருக்கிறோம். நாம் பச்சைக் குழந்தைகளாயிருந்த போது, அவர்கள் நம் மீது எவ்வளவோ அன்பு பாராட்டி, நம்மைச் சீராட்டித் தாலாட்டி கண்வளரச் செய்திருக்கின்றனர். நம்மைப் பத்து மாதம் கருப்பத்திற் சுமந்து பெற்றுத் தோள் மேலும் மார்மேலும் எடுத்துச் சென்று, நாம் பிணியுறுந்தோறும் தான் விழித்திருந்து இரவில் பொத்திக் காத்தவள் தாயன்றோ! இப்போதும் அவர்களாலல்லவோ சுகத்திலிருக்கிறோம்? நம் எண்ணங்களும், ஆசா

பாசங்கள் கோபதாபங்கள் முதலிய தீய உணர்ச்சிகளும் அன்பு தயை முதலிய நல்லுணர்ச்சிகளும், நம் காரியங்களும் நம்மைச் சுற்றியிருப்பவர்க்கு எவ்வாறு துக்க சுகங்களைச் செய்து பிறகு நமக்கும் துக்க சுகங்களை விளைக்கின்றனவென்பதை மாணவர்களுக்கு நிரூபிக்க வேண்டும். இத் தத்துவங்களை அவர்களுக்கு இதிற் கூறியபடியே சொல்லலாகாது. பின் எப்படியெனில், பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் இவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலமாய் கல்வி முறைபைத் தேர்ந்த அறிவுடன் திருத்திக் கொள்ளவும், பிள்ளைகளுக்குத் தக்க நன்மாதிரிகளாய் விளங்கவும் கூடும்.

சரியான கல்வி முறையைப் பற்றிச் சிந்திக்கையில் நாம் மறக்க வொண்ணாத முக்கிய அம்சங்கள் இரண்டு. (1) விகஸித்து வரும் ஜீவன் (க்ஷேத்ரஜ்ஞன்) (2) அவனைச் சூழ்ந்திருக்கும் இடம், பொருள், ஏவல் முதலிய சௌகரிய சந்தர்ப்பங்கள் (க்ஷேத்ரம்). விளங்கச் சொல்லின், ஓர் மரத்தின் வளர்ச்சி அதன் விதையையும், நிலத்தையும் பொறுத்ததல்லவா? கல்வி முறையின் இலக்ஷணங்கள் இவ்விருவகையாகவே இனி விவரிக்கப் பெறும். வேதாந்தமும் பிரஹ்ம வித்தையும் நம் நாட்டில் ஏராளமாய் ஏடுகளில் உள்ளன.

அவைகளில் வாக்கு வாதங்களும், சொற் பிரசங்கங்க ளும் செய்கின்றவர்களும் வேண்டிய மட்டும் கிடைப்பர். அவற்றை நாம் அநுஷ்டிப்பதெவ்வாறு, குழந்தைகளை அவ்வழியில் பழக்குவதெப்படியென்று தாமே நிதரிசன மாய் நடந்து காட்டுகிறவர்கள் மட்டும் அபூர்வம்.

முதலாவது, ஒவ்வொரு ஜீவனும் தனக்குத் தானே பந்துவாயிருக்கும்படி அவனுட்புதைந்து கிடக்கும் சக்திகளை யெல்லாம் பிரபலமாய் வெளிப்படச் செய்து, அவனைப் பரிபாக முறையில் முன்னேற்றுவதாகும். இது ஆசாரம் எனப்படும்.

இரண்டாவது, "விவகாரம்" எனப்படும். அதாவது பழக்கம் எனப் பொருள் படும். இங்கு குறிப்பிடப்படு வது வெருமையான வழக்கு அல்ல. காரியத்திற் கைப் பிடிக்க வேண்டிய தருமங்கள் அல்லது கடமைகளாம. ஜீவன் பரிபக்குவத்தில் மேற்செல்லச் செல்லத் தன் கடமைகளுக்குரிய க்ஷேத்திரங்களும் பெரிதாகிக் கொண்டே போவதை உணருவான். உதாரணமாக வீடு, பள்ளிக்கூடம், கலாசாலை, நகரம், மாகாணம், தேசம், ஜாதி, மனித குலம் இத்தனை படிகளில் ஜீவன் பக்குவம் பெறவேண்டியவனாயிருக்கிறான். க்ஷேத்ரம் மாறினாலும் அவன் சாசுவதனாயிருக்கிறான்,

இவ்வொன்பது படிகளில் முதல் மூன்றும் இரண்டாவது மூன்றுக்கும், இவ்வாறும் கடைசி மூன்றுக்கும் சாதகமென்பதைக் கவனிக்க. ஜீவன் தாயின் கர்ப்பத்திலிருந்து மூன்றுமாதத்தில் ஓர் குறித்த வளர்ச்சியும், ஆறுமாதத்திலும் ஒன்பதாமாதத்திலும் ஒரோர் குறித்த வளர்ச்சியும் அடைந்து இவ்வுலகில் பிறப்பது போல், மேற்குறித்த ஒன்பது விதமான க்ஷேத்திரத்தில் பழகித் தேர்ந்தவனே உலகத்தில் சரியான குடித்தனக்காரனுகக் கடவன், இவ்வாறு குடித்தனக்காரனுவதற்கும், குழந்தைப் பருவமும் வாலிபப் பருவமும் குமரப் பருவமும் தாண்டியே தீரவேண்டி யிருப்பது காண்க. இனிக் கல்வி முறையின் ஒவ்வொரு வகுப்பின் நோக்கங்களென்னவென்று சிந்திப்போம்.

## நோக்கங்கள்.

**மத விஷயமான கல்வி**:—பக்குவமாகிவரும் ஜீவனுக்கு இயற்கையான தடைகளாய் வரும் பிரதி பந்தங்களை நீக்குவித்தலே இதன் உத்தேசம். ஈசுவர பக்தி (ஆசார பக்ஷம்) யும், பரோபகார ஊழியமும் (விவகார பக்ஷம்) கற்பிக்கப் பெறவேண்டியவைகள். வரும் இடையூறெல்லாம் வேற்றுமை யுணர்விஞலேயே

யாகையால், ஒற்றுமை யுணர்வையே விருத்தி செய்தல் வேண்டும்.

**விவேகப் பயிற்சி** :—பக்குவமாகிவரும் ஜீவனின் ஓர் அம்சமாகிய ஞான சக்தியைப் பலப்படுத்திப் பயிற்றல் இதன் உத்தேசம். அதாவது உற்று ஆராய்தல், ஞாபகம், முறைப்படுத்தல், தர்க்கித்தல், நிதானித்தல், தெளிவாய்ச் சிந்தித்தல், தெளிவுறச் சொல்லுதல், எழுதுதல் இவை (ஆசார பக்ஷம்). ஜனஸமுதாயம் இக்காலத்திய நிலைக்கு அபிவிருத்தியடைந்து வந்திருக்கும் முறையைத் தெரிந்து கொள்வதும் இனி அபிவிருத்தி யடையவேண்டிய அடுத்தபடியைத் தெளிவாயுணர்தலும் (விவகார பக்ஷம்).

**சீலப் பயிற்சி** :—பக்குவமாகி வரும் ஜீவனின் மற்றொரு அம்சமாகிய இச்சா சக்தியைப் பயிற்றலாம். அந்தராத்மாவின் இயற்கைக் கிணங்க ஜீவன் தன் திரிகரணங்களை அடக்கி யாண்டு ஒழுங்குபடுத்துவதன் மூலமாய் ஸத்தியத்தில் நிலைபேறல். விவேக சம்பந்தமான விஷயங்களில் உண்மையும், நுட்பமும், விவேகத்தால் தேர்ந்து நிச்சயித்த லக்ஷியத்தை அடைய முயலுதலும் இதிலடங்கும் (ஆசார பக்ஷம்). அன்பும் ஸரஸ ஸல்லாப குணங்களும், தன் கடமையை யுணர்ந்து, பொறுப்பாய் நிறைவேற்றலும் (விவகார பக்ஷம்).

சரீரப் பயிற்சி:—நரம்புகள், தசை நார்கள், மாம் ஸக் கிரந்திகள், இவற்றையெல்லாம், பலப்படுத்திப் பயிற்சி செய்வதால், ஜீரணக் கருவிகளும், சுவாஸாசயமும், ரக்த வோட்டமும், கர்மேந்திரிய ஞானேந்திரியங்களும் சத்தம் தொழிலை நன்கு செய்யவும், அதனுல் பக்குவமாகி வரும் ஜீவனுக்கு அச் சரீரம் ஓர் ஏற்ற கருவியாகவும் ஏதுவாகும். இவ்வெல்லா வீதங்களிலும் ஸமமாய்ப் பயிற்றி அடக்கியாளப்பட்ட சரீரமே ஸகல தர்மத்துக்கும், மஹோமயமான ஸகல பிரவர்த்திகளுக்கும், ஆத்ம சம்பந்தமான ஸகல அப்பியாஸங்களுக்கும் சாதனமாம். தூல சரீரம் சரியாயிராவிட்டால் இவையாவும் மிதமிஞ்சியும் விபரீதமாகவும் அதமமாகவும் போகக் கூடியவைகள் (ஆசார பக்ஷம்). மேற்கூறிய ஒன்பது விதமாக ஏற்படும் உணர்வுகளுக்கேற்ற கடமைகளைக் கைக்கொண்டு சேவா கைங்கரியத்தில் ஈடுபடுதல் சரீரம் எடுத்ததன் பயனும் (விவகார பக்ஷம்).

## இயற்கை உண்மைகள்.

மனிதர்களின் பரிபாகம் சாதாரணமாக ஆரம்ப நிலையில் 1 முதல் 21 வயதுக்குள் ஒருவாறு முடிகிறது. கலாசாலைப் படிப்பெல்லாம் இதற்குள் முடிந்து, மேற்கட்டு உலக அறிவைச் சம்பாதிக்கத் தயாராதல் வேண்டும்.

**ஒன்று முதல் 7 வயது வரை**:—முக்கியமாய் சரீர வளர்ச்சிக்குரியது. இந்திரியங்களின் பிரவர்த்தியே பிரபலமாயிருக்கும். இந்திரியங்கள் வெளி விஷயங்களிற் சென்று நுகர்வதன் பயனுய் காமக் குரோதாதிகள் தூண்டப்படுகின்றன. ஆகையால் இப்பருவத்தில் குழந்தைகள் இயற்கைப் பொருட்களையும், குறித்த காரண காரிய முறையில் நிகழும் இயற்கைச் சம்பவங்களையும் நுட்பமாய்ப் பார்த்தறியப் பழக்கப் பெற்றால் அதன் மூலமாய் பிறகு தர்க்கித்துத் தெரிந்து கொள்ளச் சாதகமாகும். இப் பருவத்தில் மூளை முதிர்ச்சியடையாமையால், தர்க்கத்திற் குழந்தைகளைப் பயிற்றலாகாது. தமக்காவது பிறருக்காவது கெடுதல் செய்யாதவரைக்கும் குழந்தைகளை யதேச்சைப் படி விடுதலில் பிழை இல்லை, அதனால் அக் குழந்தைகளின் சக்திகள் மலர இடமுண்டு. அவர்களுடைய கோபம், ரோசம் முதலிய உணர்ச்சிகளை மெதுவாய் அடக்கி வசப்படுத்த வேண்டும். சரீரத்தின் போஷணையை மிகவும் கவனித்தல் வேண்டும்.

**7 முதல் 14 வரை**:—முக்கியமாய் மனோவிகார உணர்ச்சிகளைப் பற்றிய பருவம். விவேகத்தின் சக்திகள் யாவும் இவற்றின் வழியே செல்லும். ஆகையால் பையன்களும் பெண்களும் யௌவனமடையுங்கால்

இம்மனோவிகார உணர்ச்சிகளைப் பயிற்றிப் பண்படுத்தி வசத்திற் கொள்ளும்படி கல்வி முறை சாதகமாயிருத்தல் வேண்டும். உதாரணமாக சரீரத்தின் தர்மங்களையும் தொழில்களையும் குணங்களையும் பொதுப்பட ஒருவாறு அவர்கட்குக் கற்பித்தலவசியம். அதனால் விவேக வாயிலாகத் தன் மனோவிகார உணர்ச்சிகளை தன் வசப்படுத்திக் கொள்ளல் முடியும். விவேகத்தைத் தர்க்க முறையில் பயிற்ற இதுவும் பருவமல்ல. இப்பருவத்தில் அநேக விஷயங்களை உற்றுப் பார்த்தும் பரீக்ஷித்தும் தெரிந்து கொள்ளச் சௌகரியங்களைச் செய்ய வேண்டும். அவைகளை நேர்மையாய் முறைப்படுத்திக் கொண்டு ஞாபக சக்தியை விருத்தி செய்து கொள்ளல் கூடும். வாய்ப்பாடுகள், பல பாஷைகள் கற்றுக் கொள்ளல் முதலிய படிப்புக்கள் பிரயோசனமானவை.

**14** முதல் **24** வயது வரை தர்க்கம், தத்துவ சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம், கலாசாஸ்திரம் முதலிய வகையான விவேகப் பயிற்சிக்குரியது.

18388